வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி-12.7.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிம்ஸ்டெக் பிராந்தியத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிப்பதில் பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் பங்கு முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்திய கடல்சார் துறையின் மேம்பாட்டில் முக்கிய மைல் கல்லாக, கேரளத்தின் விழிஞ்ஞும் துறைமுகம் திகழும் என்று, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார்.

1975-ஆம் ஆண்டு, அவசர நிலை அறிவிக்கப்பட்ட நாளான, ஜூன் 25-ஆம் தேதியை, ஆண்டு தோறும், **சம்விதான் ஹத்யா தின**மாக அனுசரிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுச்சேரியில், மொத்தம் 96 லட்சம் ரூபாய் மதிப்பிலான, 5 பால் குளிரூட்டு நிலையங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

மோடி-பிம்ஸ்டெக்

வங்க கடலைச் சுற்றியுள்ள பிம்ஸ்டெக் பிராந்தியத்தில் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிப்பதில் பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் பங்கு முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இன்று புதுடெல்லியில் பிரதமரை சந்தித்த போது அவர் இவ்வாறு வலியுறுத்தினார். பிம்ஸ்டெக் பிராந்தியத்தை. நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய. அமைதியான, வளமான, பாதுகாப்பான பிராந்தியமாக மேம்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பிம்ஸ்டெக் பிராந்தியத்தில் வர்த்தகம், எரிசக்தி, போக்குவரத்து தொடர்புகள், வேளாண்மை, சுகாதாரம், மக்கள் நிலையிலான தொடர்புகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து, பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்களுடன், பிரதமர் பயன் உள்ள விவாதங்களை மேற்கொண்டார். அண்டைநாடுகளுக்கும், கீழைநாடுகளை நோக்கிய செயல்பாடுகளுக்கும் முக்கியத் துவம் அளிப்பதான இந்தியாவின் கொள்கையிலும், பிராந்திய அளவிலான அனைத்து நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்தியாவின் சாகர் தொலைநோக்கு திட்டத்திலும், பிம்ஸ்டெக் நாடுகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். வரும் செப்டம்பர் மாதம் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டை தலைமையேற்று நடத்தவதில், தாய்லாந்து

நாட்டிற்குத் தேவையான எல்லா உதவிகளையும் இந்தியா வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சோனோவால்

கேரள மாநிலத்தின் விழிஞ்ஞும் துறைமுகம் இந்தியாவில் உலகத் தரம் வாய்ந்த துறைமுகங்களை உருவாக்குவதான பிரதமர் திரு நரேந்திர மோடியின் கனவை நனவாக்குவதில் முக்கிய முன்னேற்றம் என்று மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார். விழிஞ்ஞும் துறைமுகத்திற்கு முதல் கப்பலாக வந்து சேர்ந்துள்ள சான் ஃபெர்னாண்டோ சரக்கு பெட்டக கப்பலை வரவேற்க, துறைமுகத்தில் இன்று நடைபெற்ற அதிகாரப் பூர்வ விழாவில் உரையாற்றிய அவர் நாட்டின் கடல்சார் துறையின் மேம்பாட்டில் முக்கிய மைல் கல்லாக, விழிஞ்ஞும் துறைமுகம் திகழும் என்றார். விழிஞ்ஞும் துறைமுகத்தை உலகத் தரம் வாய்ந்த துறைமுகமாக மாற்றுவதில் கேரள அரசு மேற்கொண்ட முயற்சிகளை அவர் பாராட்டினார். கேரள முதலமைச்சர் திரு பிரனாய் விஜயன் இவ்விழாவில் பேசுகையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த விழிஞ்ஞும் துறைமுகத் திட்டம் தற்போது நிறைவேறி இருப்பதால், கேரளத்தின் வளர்ச்சியில் புதிய அத்யாயம் தொடங்கி இருப்பதாகவும் கூறினார். சீனாவில் இருந்து நேற்று விழிஞ்ஞும் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த சான் ஃபிரான்சிஸ்கோ கப்பலில் இருந்து 1930 சரக்கு

பெட்டகங்கள் இறக்கப் பட்டுள்ளதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வரவிருக்கும் நாட்களில் வேறு பல பெரிய கப்பல்கள் விழிஞ்ஞும் துறைமுகத்திற்கு வரும் என்றும் இதனால் கப்பல் மாறிச் செல்ல வேண்டிய சரக்குகளுக்கான உலகத் துறைமுகங்களின் வரைபடத்தில் கேரளத்தின் இடம் வலுப்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*அரசியல் சாசனம்*

1975-ஆம் ஆண்டு, அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியால் அவசர நிலை அறிவிக்கப்பட்ட நாளான, ஜுன் 25-ஆம் தேதியை, ஆண்டு தோறும், **சம்விதான் ஹத்யா தினமாக** அனுசரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஒடுக்குமுறை அரசால் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்த நிலையிலும் ஜனநாயகத்தை உயிர்ப்பிக்கப் போராடிய லட்சக் கணக்கான மக்களின் உணர்வை கவுரவிக்கும் வகையில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். **அரசியல்சாசனப் படுகொலை தினம்** அனுசரிப்பதால், தனிநபர் சுதந்திரம் என்னும் நிரந்தரச் சுடரை அணையாமல் பராமரிக்கவும். ஒவ்வொரு இந்தியர் மனதிலும் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் ஏதுவாகும் என்று அமைச்சர் கூறி உள்ளார். அப்பட்டமான சர்வாதிகார மனப்போக்குடன் அறிவிக்கப்பட்ட அவசர நிலையினால் இந்திய ஜனநாயகத்தின்

குரல்வளை நெரிக்கப்பட்டு, எந்த தவறும் செய்யாத பலர் சிறையில் அடைக்கப்பட்டதாகவும், ஊடகங்களின் குரல் முடக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*மீன் வளம்*

மத்திய மீன்வளத் துறையின் சாதனைகளை எடுத்துக் கூறும் வகையில் மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கோடைக்கால மீன்வள மாநாட்டை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று தொடக்கி வைத்தார். மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, மீன்வளர்ப்பு குறித்த தொழில் நுட்பக் கண்காட்சியை அமைச்சரும், இணை அமைச்சர்கள் திரு எஸ்பி சிங் பகேல், திரு ஜார்ஜ் குரியன் ஆகியோரும் இணைந்து தொடக்கி வைத்தனர். 100 கோடி ரூபாய் மதிப்பில், மீன்வளத் துறை சார்ந்த 125 திட்டங்கள் நிகழ்ச்சியின் போது காணொளி காட்சி மூலம் தொடக்கி வைக்கப்பட்டன. மீன்வள உற்பத்தி அமைப்புகள் மற்றும் மீன்வள கூட்டுறவு சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குறித்து, புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த அலங்கார மீன்வளர்ப்பு பிரிவில், மதுரையைச் சேர்ந்த 5 பயனாளர்களுக்கு, விழாவின் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. உத்தரபிரதேஷ், பீகார், அசாம், மேகாலயா, ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் மீன்வளத் துறை அமைச்சர்களும் இதில் கலந்து கொண்டனர்.

*ராதாகிருஷ்ணன்*

அரசு முறைப் பயணமாக புதுடெல்லி சென்ற புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் தலைநகரில், மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா-வை நேரில் சந்தித்து, புதுச்சேரி,தெலங்கானா மற்றும் ஜார்கண்ட் மாநில வளர்ச்சி திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.

*ரங்கசாமி-பாண்லே*

புதுச்சேரியில், தேசிய பால்வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ், அரியூர், மங்கலம், கடுவனூர், கொரவள்ளி மேடு, மற்றும், பிள்ளையார்குப்பம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில், மொத்தம் 96 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள, தலா 3 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட, 5 பால் குளிரூட்டு நிலையங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, சட்டமன்றத்தில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். கிராமப் பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் பாலை உடனடியாக குளிர்வித்து, பதனீட்டு ஆலைக்கு அனுப்ப இதனால் ஏதுவாகும் என்று புதுச்சேரி பால் உற்பத்தியாளர் ஒன்றியம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. புதுச்சேரி பாண்லே நிறுவனத்தில் 10-ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் 18 ஊழியர்களுக்கும், காரைக்கால் கோலே நிறுவனத்தில் பணியாற்றி வந்த

13 தினக் கூலி ஊழியர்களுக்கும், பணி நிரந்தர ஆணைகளை, முதலமைச்சர் இன்றைய நிகழ்ச்சியின் போது வழங்கினார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு ஜெயக்குமார், திரு சாய் சரவணன் குமார், திரு பிஆர் என் திருமுருகன், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம் மற்றும், கூட்டுறவுத் துறைச் செயலர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், பாண்லே மேலாண் இயக்குநர், உள்ளிட்ட அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். முன்னதாக, வேதபுரீஸ்வரர் வரதராஜப் பெருமாள் நகரில், 1.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, புதுச்சேரி பொது ஊழியர் கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய கட்டிடத்தையும், முதலமைச்சர் திரு ரங்கசாமி திறந்து வைத்தார்.

விக்கிரவாண்டி

கடந்த 10-ஆம் தேதி இடைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெற்ற, தமிழகத்தின் விக்கிரவாண்டி உட்பட, 7 மாநிலங்களைச் சேர்ந்த 13 சட்டமன்றத் தொகுதிகளில், வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெற உள்ளது. விக்கிரவாண்டியில், பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில், 3 அடுக்கு பாதுகாப்புடன், அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

*மத்திய பொதுப் பணி*

மத்திய பொதுப் பணித் துறை மூலமான திட்டங்களை, உரிய காலத்திற்குள், தரமான முறையில் நிறைவேற்றி முடிக்க வேண்டிய அவசியத்தை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர்லால் வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லியில் மத்திய பொதுப் பணித் துறையின் 170-ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர் திட்டங்களின் அமலாக்கத்தில், செலவின கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படைத் தன்மையும் மிக முக்கியம் என்றார். பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள், தங்களின் பணியில், புதிய தொழில் நுட்பங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

*சிந்தியா*

வடகிழக்கு மாநிலங்களை நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தலைவாசலாகவே பிரதமர் திரு நரேந்திர மோடி கருதுவதாகவும், பிரதமரின் இந்த தொலைநோக்கு பார்வையை நிறைவேற்ற அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாகவும், வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறி உள்ளார். இன்று குவஹாத்தி விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமது அமைச்சகத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள், 24 ஆயிரம் கோடி ரூபாயில் இருந்து 82 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்

பட்டுள்ளதாகவும் வடகிழக்கு மாநிலங்களில், உள்கட்டமைப்பு, போக்குவரத்து, கல்வி, மருத்துவம், தொழில், சுற்றுலா உள்ளிட்ட துறைகளை மேம்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் கூறினார். ஷில்லாங்கில் உள்ள வடகிழக்கு கவுன்சில் செயலகத்தில் இன்று நடைபெற்ற மறுஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பங்கேற்றார். விவசாயிகள், வியாபாரிகளுடன் பேரம் பேசி தங்களின் விளைபொருட்களை விற்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ள, நெரேஸ்-மொபைல் செயலியை அவர் வெளியிட்டார். நாளைய தினம் குவஹாத்தியில் அதிகாரிகளை அவர் சந்தித்து, பிராந்தியத்தில் தொழில் முனைவு மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவிப்பது குறித்து விவாதிக்கிறார்.

உத்தராகண்ட்

உத்தராகண்ட் மாநிலம் சாமோலி மாவட்டத்தில், ஜோஷிமட் அருகே மழையினால் ஏற்பட்ட நிலச் சரிவால் போக்குவரத்து பாதிக்கப்பட்ட பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில், இன்று இருசக்கர வாகனங்கள் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, வரவிருக்கும் நாட்களில், உத்தராகண்ட் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

அசாம்

அசாமில் வெள்ள நிலவரம் இன்று சற்றே மேம்பட்டுள்ள நிலையிலும் 26 மாவட்டங்களைச் சேர்ந்த 2-ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட கிராமங்களில், சுமார் 39 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களில், பயிர்கள் தொடர்ந்து வெள்ளத்தில் முழ்கி உள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதாக தகவல் இல்லை. இதற்கிடையே, அசாமில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

வானிலை

மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகளில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார்வளைகுடா, தென்தமிழகம் மற்றும் வடதமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மத்திய மேற்கு மற்றும் வடமேற்கு வங்க கடல் பகுதிகள், மற்றும், ஆந்திர கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

கெஜரிவால்

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பான பணச் சலவை வழக்கில் டெல்லி உச்சநீதிமன்றம் இன்று, டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி உள்ளது. இந்த வழக்கில் அமலாக்க பிரிவு அதிகாரிகளால் தாம் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு கெஜரிவால் தாக்கல் செய்துள்ள மனுவை, 2-க்கு மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய பெரிய பெஞ்சிற்கு மாற்ற, நீதிபதிகள் திரு சஞ்ஜீவ் கன்னா, திரு தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் இன்று உத்தரவிட்டது. இதே வழக்கு தொடர்பாக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ், சிபிஐ-யும், திரு கெஜரிவாலை ஏற்கனவே கைது செய்திருப்பதால், அவர் திகார் சிறையில் தொடர்ந்து நீடிப்பார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

தன்கர்

2027-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்கும் வகையில் மக்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதில் உயர்கல்வி நிறுவனங்களின் பங்கு என்பது குறித்து, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் இன்று, மும்பையில் உள்ள, நார்சி மோன்ஜி நிர்வாகவியல் கழகத்தில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே உரையாற்றினார். அரசு நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நேர்மறை நடவடிக்கைகள் மற்றும் முன்

முயற்சிகள் காரணமாக, நாட்டில், பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், குறிப்பாக இளைஞர்களின் நன்மைக்கான மாற்றங்கள் இதில் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார். மகாராஷ்டிர ஆளுநர் திரு ரமேஷ் பைஸ், மாநிலங்களவை உறுப்பினர் திரு பிரஃபுல் பட்டேல் உள்ளிட்டவர்களும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிம்ஸ்டெக் பிராந்தியத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிப்பதில் பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் பங்கு முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்திய கடல்சார் துறையின் மேம்பாட்டில் முக்கிய மைல் கல்லாக, கேரளத்தின் விழிஞ்ஞம் துறைமுகம் திகழும் என்று, கப்பல் அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார்.

1975-ஆம் ஆண்டு, அவசர நிலை அறிவிக்கப்பட்ட நாளான, ஜுன் 25-ஆம் தேதியை, ஆண்டு தோறும், சம்விதான் ஹத்யா தினமாக அனுசரிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

புதுச்சேரியில், மொத்தம் 96 லட்சம் ரூபாய் மதிப்பிலான, 5 பால் குளிரூட்டு நிலையங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------